


**10. 11. 2025**

## தலைப்புச் செய்திகள்

1. குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தமது அங்கோலா நாட்டு பயணத்தின் ஒருபகுதியாக அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகிறார்.

2. கூட்டுறவு துறையை வலுப்படுத்தி ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என்று மத்திய கூட்டுறவு அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. மழைநீரை சேகரித்து கிராமப்புற வாழ்வாதாரத்தை வலுப்படுத்துவதன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திர சேகர் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் 25 இடங்களில் அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையங்களை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

5. முல்லை பெரியாறு அணையை, தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் தலைமையிலான 7 பேர் கொண்ட கண்காணிப்பு குழுவினர் இன்று ஆய்வுசெய்து வருகின்றனர்.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

### குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தமது அங்கோலா நாட்டு பயணத்தின் ஒருபகுதியாக அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகிறார்

அங்குள்ள இந்திய சமூகத்தினரிடமும் குடியரசு தலைவர் கலந்துரையாடுகிறார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக திகழும் இந்தியா, அங்கோலாவுடனான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான

நடைமுறைகளை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாகவும், இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேசவும் ஆவலுடன் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கோலா நாட்டின் 39-வது சுதந்திர தின கொண்டாட்டங்களில் நாளை திருமதி. திரௌபதி முர்மு பங்கேற்கிறார்.

இப்பயணத்தின் 2-வது கட்டமாக குடியரசு தலைவர் நாளை போட்ஸ்வானா நாட்டிற்கு புறப்படுகிறார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் ஆர்வமுள்ள இளையோருக்கும், விளிம்பு நிலை பிரிவினருக்கும் ஆளுமை வழங்கும் வகையில் செயலாற்றுவதன் அவசியத்தை மத்திய கூட்டுறவு அமைச்சர் திரு. அமித்ஷா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நகர்ப்புற கூட்டுறவு கடன் சார்ந்த சர்வதேச மாநாட்டை இன்று தொடங்கி வைத்து பேசிய அவர், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் நிதி கட்டமைப்பு மறுவடிவம் பெற வேண்டியது அவசியம் என்றார்.

கூட்டுறவுத் துறையை வலுப்படுத்துவதோடு ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு அரசு செயல்படுவதாகவும் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு நகரிலும் அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புற கூட்டுறவு வங்கியை தொடங்குவதே அரசின் இலக்கு என்றார்.

இளைய தலைமுறையினரையும், கூட்டுறவு துறையினரையும் ஒருங்கிணைத்து தொழில் நிபுணர்களை உருவாக்கும் வகையில் திரிபுவன் கூட்டுறவு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் 2047-ம் ஆண்டு வாக்கில் கூட்டுறவுத் துறை புதிய உச்சங்களுக்கு கொண்டு செல்லும் தலைமுறை உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

டிஜிட்டல் செயலிகள் தொடங்கப்பட்டிருப்பதால் சிறிய நகர்ப்புற கூட்டுறவு அமைப்புகளும், மின்னணு பணப் பரிவர்த்தனை நீரோட்டத்தில் இணைய வகை செய்யப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டார்.

சர்வதேச கூட்டுறவு தரவரிசை பட்டியலில் முதன்மை இரு இடங்களை பெற்றுள்ள அமுல் மற்றும் இஃப்கோ நிறுவனங்களை அமைச்சர் பாராட்டினார்.

தேசிய கூட்டுறவு சம்மேளனமும், மத்திய கூட்டுறவு அமைச்சகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த இரண்டு நாள் மாநாடு கனவுகள் மின்னணுமயம் - சமுதாய ஆளுமை என்ற கருப்பொருளுடன் நடைபெறுகிறது.

நகர்ப்புற கூட்டுறவு அமைப்புகளுக்கு ஆளுமை வழங்கி கூட்டுறவு அடித்தளத்தை வலுப்படுத்தி புதுமையான சிந்தனைகள் மூலம் நிதி உள்ளடக்கத்தை முன்னெடுத்துச் செல்வது குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

மத்திய அரசின் 2026 - 27-ம் நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தயாரிப்பதற்கான பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

அமைச்சகத்தின் பொருளாதார விவகாரங்களுக்கான செயலர், முதன்மை பொருளாதார ஆலோசகர் மற்றும் இத்துறையின் மூத்த அதிகாரிகள் பங்கேற்ற இக்கூட்டத்தில் பொருளாதார நிபுணர்களும், வல்லுநர்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து பிற்பகல் 3 மணிவரை வேளாண் நிபுணர்களும், விவசாய பிரதிநதிகளும் பங்கேற்றுள்ள 2-வது சுற்று ஆலோசனை கூட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

ஆண்டுதோறும் நாடாளுமன்றத்தில் பட்ஜெட்டிற்கு முன்னர் சம்மந்தப்பட்ட துறை வல்லுநர்களுடன் நிதியமைச்சகம் ஆலோசனை மேற்கொள்ளும் நிலையில், வரும் ஆண்டிற்கான பட்ஜெட் சார்ந்த விவாதங்களும் தற்போது தொடங்கியுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

பெம்மசானி சந்திரசேகர்

மழைநீரை சேகரித்து கிராமப்புற வாழ்வாதாரத்தை வலுப்படுத்த மத்திய தொலைத்தொடர்பு மற்றும் ஊரக மேம்பாட்டு இணையமைச்சர் டாக்டர் பெம்மசானி சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

ஆந்திர மாநிலம் குண்டூரில் நீர்நிலைகள் தொடர்பான தேசிய மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் பல்வேறு நலத்திட்டங்களும், மேம்பாட்டு பணிகளும் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டார்.

நீர் பாதுகாப்பு, தேசிய பாதுகாப்போடு தொடர்புடையது என்று எடுத்துரைத்த அவர், நீரை பாதுகாத்து அது சார்ந்த உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், நீர்நிலை திட்டங்களை அரசு ஊக்குவித்து வருவதாக எடுத்துரைத்தார்.

கடந்த 6 ஆண்டுகளில் நீர்நிலை மேம்பாட்டு திட்டங்கள் 13 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நாடுமுழுவதும் செயல்படுத்தப் பட்டதாகவும், ஆண்டுதோறும் 25 ஆயிரம் குளம் குட்டைகளுக்கு புத்துயிர் ஊட்டப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

நீரை முறையாக பயன்படுத்தினால் அதுசார்ந்த உற்பத்தி 6 மடங்கு அதிகரிக்கும் என்றும், இதனால் விவசாயிகள் ஆண்டொன்றுக்கு 3 வகை பயிர்களை சாகுபடி செய்யமுடியும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

பீஹார் தேர்தல்

பீஹார் மாநிலத்தில் 122 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் 2-ம் கட்ட தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

இத்தேர்தலில் ஆயிரத்து 302 வேட்பாளர்களின் வெற்றியை, 3 கோடியே 70 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயம் செய்கின்றனர்.

இரண்டு கட்ட தேர்தல்களில் பதிவான வாக்குகள் வரும் 14-ம் எண்ணப்பட்டு அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்படும்.

இதனிடையே ஜம்முகாஷ்மீர், ராஜஸ்தான், ஜார்கண்ட், தெலங்கானா, பஞ்சாப், மிசோரம், ஒடிஷா மாநிலங்களில் காலியாக உள்ள 7 மாநிலங்களின் 8 சட்டப் பேரவை தொகுதிகளுக்கான இடைத் தேர்தலும் நாளை நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் காலை உணவு திட்டத்தை உலக நாடுகளும் பின்பற்றுவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் 767 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதோடு, முடிவடைந்த பணிகளையும் துவக்கி வைத்து பேசிய முதலமைச்சர், தகுதியுள்ள அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என உறுதியளித்தார்.

புதுக்கோட்டை கீரமங்கலம் பகுதியில் விவசாயிகளின் நலன்கருதி காய்கறிகள், பழங்களை பாதுகாக்க ஒருகோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும்,

புதிய மினி டைடல் பூங்கா அமைக்கப்படும்,

கந்தர்வக்கோட்டை ஊராட்சி, பேரூராட்சியாகவும்,

பொன்னமராவதி பேரூராட்சி நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்படும்,

ஆவுடையார் கோவில் அருகே வடகாடு ஊராட்சியில் 10 கோடி ரூபாய் செலவில் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும்,

வீரகொண்டான் ஏரி உள்ளிட்ட முக்கிய ஏரிகள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்படும் ஆகிய 6 அறிவிப்புகளை வெளியிட்டார்.

.. வாய்ஸ் ..

43 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

திருச்சி மாவட்டத்தில் இன்று பிற்பகல் 223 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்த அவர், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மூத்த குடிமக்களுக்கான அன்பு சோலை திட்டத்தையும் முதலமைச்சர் அறிமுகம் செய்தார்.

இத்திட்டத்தின் கீழ் மதுரை, கோவை, திருச்சி, தஞ்சை, திண்டுக்கல், ராணிப்பேட்டை உள்ளிட்ட 25 இடங்களில் முதியோர்களுக்கு உணவு, சுகாதாரம், பராமரிப்பு போன்றவற்றை உறுதிசெய்யும் மனமகிழ் மையங்கள் தொடங்கப்படுகின்றன.

திருச்சி திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட பொன்மலைப்பட்டி பகுதியில் முதியோர் பகல் நேர பராமரிப்பிற்கான அன்புச்சோலை திட்டத்தை முதலமைச்சர் தொடங்கிவைத்தார்

❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

தமிழ்நாட்டில் மகளிருக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கோவை பாலியல் வன்கொடுமை சம்பவம் கடும் அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டார்.

மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய காவல்துறை அதிகாரிகள், குற்றங்களில் ஈடுபடுவதாக அவர் குறை கூறினார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி உள்ளதாக கூறியஅவர், போதைப்பொருள் புழக்கத்தாலேயே இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதாக குறிப்பிட்டார்.

வாக்காளர் பட்டியல் சீர்த்திருத்தங்களை தடுக்க திமுக அரசு முயல்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖

மீனவர்கள் கைது

எல்லைத்தாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்கள் 14 பேரை இலங்கை கடற்படையினர் இன்று கைது செய்துள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற இம்மீனவர்கள் கோடியக் கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

இதனிடையே கைது செய்துள்ள அனைத்து தமிழக மீனவர்களையும் விடுவிக்க தூதரக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மத்திய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மீனவர்களின் படகுகளை விடுவிக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

முல்லை பெரியாறு

முல்லை பெரியாறு அணையை, தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தலைவர் தலைமையிலான 7 பேர் கொண்ட கண்காணிப்பு குழுவினர் இன்று ஆய்வுசெய்து வருகின்றனர்.

இந்த ஆய்வில் தமிழக அரசு பிரதிநிதிகளாக நீர்வளத்துறை செயலாளர் திரு.ஜெயகாந்தன், காவிரி தொழில்நுட்பக்குழு தலைவர் திரு.சுப்ரமணியன் ஆகியோர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

முல்லை பெரியாறு பிரதான அணை, மதகுகள், சுரங்கம், நீர்மட்டம், கசிவுநீர் அளவு ஆகியவற்றை ஆய்வுசெய்யும் இக்குழுவினர், அணையின் பராமரிப்பு தொடர்பான ஆய்வறிக்கையை அரசுக்கு சமர்ப்பிக்க உள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

வானதி ஸ்ரீனிவாசன்

வந்தே மாதரம் பாடலின் 150-வது ஆண்டு நிறைவை ஒட்டி கோவை வ.உ.சி. மைதானத்தில் பி.ஜே.பி சார்பில் வந்தே மாதரம் பாடல் பாடும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

கட்சியின் தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி ஸ்ரீனிவாசன் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் 60 சதவிகித வாக்காளர்களுக்கு, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த்திற்கான படிவங்கள் வழங்கப்பட்டதாக ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வட உள் தமிழகம் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

நாளை திருநெல்வேலி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖